RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22328

# ஔவை நிர்மலாவும் நகைச்சுவை நாடகப்பாங்கும்

**கி. வீரமணி [அ, *], கு. சந்திரன் [அ]**

[அ] தமிழ்த்துறை, திரு.வி.க.அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்-610003, தமிழ்நாடு, இந்தியா.

# Ovvai Nirmala and the Style of Comical Drama

**K. Veeramani [a, *], K. Chandran [a]**

[a] Department of Tamil, Thiru. Vi.Ka Government Arts College, Thiruvarur-610003, Tamil Nadu, India

* Corresponding Author: veera.ngr@gmail.com

Received: 31-01-2022
Revised: 05-06-2022
Accepted: 23-06-2022
Published: 26-07-2022

Check for updates

## ABSTRACT

Man started to appear and grow up wandering everywhere in the forest, mountains, ridges, ravines and living in caves. Then, he carried on with a joint family life. It is probable to state that the creation of drama happened when the first Man who had wandered everywhere but not knowing any language communicated his opinion in an artificial mode to his fellow beings. Yes, the theatrical creation might have appeared when man appeared. Silapathikaram was created as a theatrical epic centered on a citizen. After that, plays like Sankardas Swamy's Pammal Sambandhamudaliar's were set to attract the public. In this context, Professor Ovvai Nirmala's play 'Navabharatham in Paradise' is a satirical play that points to all levels of society and evokes thought. The play that is flavored with the taste of all the ingredients is humorous and lashes out at all levels of society with a sense of accompaniment. All theatrical events take place in the celestial world. Not only legends like God Shiva, Goddess Umai, God Thirumal, Naradhar and also Thiruvalluvar, Kambar, Bharathi etc. strolled with him and created his imaginative satire from the social perspective.

**Keywords:** Drama, Navbharata, Ovvai Nirmala, Social Justice, Kailayam

## முன்னுரை

மனிதன் தோன்றி வளர்ந்து காடு, மலை, மேடு, பள்ளம் எங்கும் அலைந்து திரிந்து குகைகளிலேயே வாழத்தலைப்பட்டான். பின்பு கூட்டு வாழ்க்கை மேற்கொண்டான். ஊர் கண்டான், நாடுகண்டான், உலகுகண்டான், மொழிஅறியாமுதல் மாந்தன் தன் கருத்தைத் தன்னையொத்த மாந்தனுக்கு செயற்கை மூலம் உணர்த்தினான் அப்போது நாடக ஆக்கம் உண்டானது எனலாம். ஆம் நாடக ஆக்கம் மனிதன் தோன்றிய போதே தோன்றியது எனலாம்.

சிவப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம் ஒருகுடிமகனை மையமாகக் கொண்டு எழுந்தது (Manikkavasagan, 2015; Karunakaran, 2020). அதற்குபின் சங்கரதாஸ் சுவாமிகள் பம்மல் சம்பந்தமுதலியார் போன்றோர் நாடகங்கள் பொதுமக்களை ஈர்க்கும் வகையில் அமைந்தன (Ramasamy, 2002). இந்நிலையில் பேராசிரியர் அவர்களின் “சொர்க்கத்தில் நவபாரதம்” என்னும் நாடகம் சமூகத்தின் எல்லா நிலைகளையும் சுட்டிக்காட்டி நகைச்சுவை பொங்க ஓர் இன்பியல் நாடகமாக அமைந்து சிந்தனையைத் தூண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை (Avvai Nirmala, 2008).

## நாடகம்

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பல்வகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு + அகம் = நாடகம். அதாவது நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை. கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு (Rajesh Kanna & Sathiyaraj 2022). ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம் (Vijayakumar, 2022).

## நாடகத்தின் வகைகள்

தமிழ் நாடகங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். புராண நாடகம், பக்தி இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், கற்பனை நாடகம், பக்தி இலக்கிய நாடகம், சமுதாய நாடகம், சமுதாயச் சீர்திருத்த நாடகம், தேசிய நாடகம், நகைச்சுவை நாடகம் என நாடகங்களை பல்வேறு வகைப்படுத்திப் பார்க்க முடியும் (Suryanarayana Sastri, 2021; Rajesh Kanna & Sathiyaraj 2022). நகைச்சுவை நாடக வரிசையில் தற்காலத்தில் மலிந்து கிடக்கும் சுயநலவாதிகள் அரசியல் போர்வையில் அட்டுழியம் நிகழ்த்துபவர்கள், கடமை குறித்து கவலை கொள்ளாத கல்நெஞ்சக்காரர்கள்.

மக்கள் நலனில் அக்கறையற்ற மருத்துவர்கள் அலுவலர்கள் என ஒருவரையும் விடாமல் உற்று நோக்கி அவர்தம் உண்மை முகங்களுக்கு முகமூடியிட்டு உங்கள் முன் அவர்களை உலவவிட்டுள்ளார்.

இந்த நாடகத்தில் உலவும் முகமூடியணிந்த அந்தப் பாத்திரங்கள் அனைவரும் உங்கள் வீட்டுக்கும், எங்கள் வீட்டுக்கும் அருகில் இருப்பவர்கள் தாம் உமக்கும் எமக்கும் உறவுகள் தாம் நீங்களும் நானும் தினம் தினம் பார்த்துக் கோவமோ சலிப்போ அடையும் சுயநலமிகள்தாம்.

எதுவும் செய்ய இயலவில்லையே என்று குமுறும் உங்களைப் போன்ற நல்லுள்ளங்களை ஆற்றுப்படுத்தும் உரிய முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைகிறது "சொர்க்கத்தில் நவபாரதம்" என்ற நகைச்சுவை நாடகம்.

## சொர்க்கத்தில் நவபாரதம்

### காட்சி- 1 (நிகழிடம் கைலாயம், நிகழ்த்துவோர்: சிவன், உமை, திருமால், நாரதர், எமன், சித்திரகுப்தன்)

இந்நாடக கதைமாந்தர் அனைவரும் இன்றைய பாரதத்தின் பல்வேறு பிரச்சனைகளை தம் வாழ்வியலோடு பொருத்திப் பார்த்துப் புதியபாரதம் காண்பதற்கு ஒருவழி முறையைத் தேடி இருக்கின்றார் எழுத்தாளர். இவ்வாறு நிகழிடம் சொர்க்கமாகவும் ஒன்பது காட்சிகளாகவும் அமைத்து இடம்பெறுவதால் இந்நாடகம் "சொர்க்கத்தில் நவபாரதம்" என்ற பெயரின் பொருத்தப்பாட்டை நிறைவேற்றுகிறது எனலாம்.

## சமூகநீதி

இந்நாடகம் ஒருநகைச்சுவை நாடகமாக மட்டுமின்றி சமூக அக்கறையுடன் சமூக நீதி குறித்தும் பேசப்பட்டுள்ளது. கதைவானுலகச் சொர்க்கத்தில் நிகழ்வதான கற்பனையில் பூவுலகச் செய்திகள் அழகாய் வெளிப்பட்டுள்ளன. நாட்டில் நிகழும் வெடிகுண்டு கலாச்சாரத்தைச் சுட்டிக்காட்டும் நாடக ஆசிரியர் அதுபோன்ற அவலங்கள் தொடர்ந்து நிகழக்கூடாது என்றதம் விழைவைப் புலப்படுத்தியுள்ளார்.

இந்த வெடிகுண்டு கலாச்சாரத்தால் எத்தனை மனிதஉயிர்கள் அற்பமாய்க் கொல்லப்படுகின்றன என்று தெரியுமா மகேஸ்வரா? பல்வேறு அமைப்புகள் இயக்கங்கள், சமூகஅக்கறைக் குழுக்கள் என்ற போர்வையில் தீவிரவாதிகள் அரசின் சில செயல்பாடுகளை எதிர்ப்பதாகக் காட்டிக்கொண்டு அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கின்றார்கள். என்று சொர்க்கத்தில் திருமால் பேசுவதாக அமைக்கப்பட்டுள்ளன

இந்தப் பகுதியில் இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் இம்மண்ணில் நிகழவே கூடாது என்ற தம் வெளிப்பாட்டைமுன் வைத்திருக்கிறார்.

ஒருவன் குற்றவாளி என்று தெரிந்தும் வாதிடுகிறானே அந்த வழக்கறிஞர்களுக்கு என்ன தண்டனை? குற்றவாளியை விட குற்றம் செய்யத் தூண்டியவன் குற்றத்தை மறைக்க உடந்தையாக இருந்தவன் பொய்சாட்சி சொன்னவன் ஆகியோருக்குத் தண்டணை உண்டு என்று சட்டம் சொல்கிறது. அதைப்போன்று குற்றவாளியின் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞருக்கும் தண்டணை கிடைக்கும் என்ற சட்டம் வந்தால் தெரிந்தே குற்றவாளிக்குத் துணை போகும் இந்தநிலை தொடருமா? என்று வாதிடுகிறார். நாரதர் கதாப்பாத்திரத்தில் எழுத்தாளர் அவர்கள் இப்பகுதியில் வழக்குரைக்கும் வழக்கறிஞர்கள் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்படும் போது குற்றங்கள் குறைந்து காலப்போக்கில் அவை முற்றிலுமாகக் குறைந்துபோகும் என்ற சிந்தனையோடு நமக்குள் நம்பிக்கையையும் விதைத்துள்ளார்.

ஏதாவதொரு ஆதாரத்தை வைத்துக்கொண்டு மற்றவர்களை மிரட்டுவதெல்லாம் குறுக்குப் புத்திக்கொண்ட மானிடர் சிலரின் வேலை. தனிமனித சண்டை சச்சரவுகளை பெரிதுபடுத்தி எதிரிகளைப் பழிதீர்த்துக் கொள்ள வேண்டுமென்றே எதிரிகள் தங்களின் இனப்பெயரைக் கேவலப்படுத்திவிட்டனர் என்று பொய்ப்பிரசாரம் செய்து கலவரம் ஏற்படுத்தும் அவர்கள் கைக்கொள்ளும் சில அபாயகரமான ஆயுதங்கள் என்று எமன் கூறுவதாக கூறிநாட்டில் நிகழும் சாதிமதக் கலவரங்களை ஏற்படுத்தும் மனிதர்களின் முகத்திரையை வெளிப்படுத்தி உள்ளார் ஆசிரியர்.

இவ்வாறு தமக்கு வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் சமூகச்சிந்தனைகளை ஊட்டி நாடு நல்ல வழியில் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

## பெண்ணியச் சிந்தனை

**திருமால்:** சிம்மவாஷினியே உனக்கு அதிகாரம் இல்லாமலா? நீ சிவனின்
ஒருபாதி அதுவும் சரிபாதி ஆயிற்றே!

**உமை:** சீதை மணாளா, சரியாகச் சொன்னீர்! அதனால் இனி நானும் நம்
தேவலோகச் சட்ட திட்டங்கள் சிலவற்றை மாற்றியமைக்க வேண்டும்
என்று எண்ணுகிறேன் அது……

**சிவன்:** தேவி….. இதோபார்! நாம் கூட்டம் ஆரம்பித்து வெகு நேரமாகி விட்டது.
வேறு சில பிரச்சனைகளையும் நான் சென்று பார்க்க வேண்டியுள்ளது.
அதனால் நீ கொண்டு வர விழையும் மாற்றங்களைப் பிறகு
பரிசீலிப்போம்.

(உமையம்மையின் முகம் சுருக்குகிறது)

என்னும் பகுதியில் பெண்ணியச் சிந்தனையை முன்வைத்து எந்நிலையிலும் பெண்ணை அடிமைப்படுத்தி விடுவது ஆடவரின் போக்காக இருக்கிறது. கடவுளர் உலகமும் இதற்கு விதிவிலக்கில்லை என்பதைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

**உமை:** உங்கள் மனைவி பலரும் நிறைந்தசபையில் அறிவுப்பூர்வமாக
எக்கருத்தையும் சொல்லஅனுமதி இல்லைஅப்படித்தானே? ஒருபெண்
என்னதான் படித்துப் பட்டம் பெற்றுபதவியில் இருந்தாலும் அவளை
இந்தச் சமூகம் பெண்ணாகத்தான் பார்கிறது. அவளது அறிவை
ஆடவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**சிவன்:** உமா, நீஏன் பேச்சை மாற்றுகிறாய்? நான் உன்னைப் பற்றிக் கேட்டால் நீ உலகைப் பற்றிப் பேசுகிறாய்! அதுவும் பூலோக மக்களைப் பற்றி?

**உமை:** தேவலோகம் என்ன? பூலோகம் என்ன? எல்லாம் ஒன்றுபோலத்தான் இருக்கின்றன. ஆடவன் எப்பொழுதும் பெண்ணை மட்டமாகவே கருதுகிறான்.

பெண்கள் எப்போதும் ஒருபடி கீழே முட்டாள்களாக இருக்க வேண்டும் என்று ஆடவர் விரும்புகிறார்கள். தனக்கு நிகரான அறிவுடன் பெண் இருக்கிறாள் என்பதை இந்த ஆடவரால் ஏன் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று தெரியவில்லை. ஒருவன் தனக்குக்கீழ் பணிப்புரியும் ஒர் ஆடவன் தன்னை விட அறிவிலும் ஆற்றலிலும் சிறந்திருந்தால் பல நேரங்களில் மனந்திறந்து பாராட்டுகிறான்.

ஆனால், தனது மேலதிகாரி பெண்ணாக இருந்துவிடும் பட்சத்தில் அவனால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அப்பெண் மேலதிகாரி தப்பித்தவறி ஏதாவது பிழை செய்யமாட்டார்களா? என்று அவருக்குக் கீழ்ப்பணி செய்யும் ஆடவர்கள் ஆர்வத்துடன் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு தேடுகின்றனர்.

அப்படி ஏதேனும் தவறு ஒன்று கிடைத்து விட்டால் போதுமே…எத்தனைக் கோணங்களில் அதை ஆராய முடியுமோ ஆராய்ந்து தங்களுக்குள் பேசிக் கேலி செய்து மகிழ்ச்சி அடைகிறார்கள். அப்படியென்றால் பெண் விடுதலை எங்கே இருக்கிறது? எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்தான் என்று உமையம்மை பேசுவதாக வரும் பகுதியில் சமுதாயத்தில் பெண் குறித்து நிகழும் அவலங்களைக் கடவுளர் உலகத்தில் விவாதிக்கச் செய்து எழுத்தாளர் பெண்களின் பிரதிநிதியாய் முன் நிற்பதாக தன்னை உறுதிப்படுத்தியுள்ளார்.

## கற்பனை நயம்

இந்நாடகம் முழுவதும் சொர்க்கத்தில் நடைபெறுவதாகக் காட்டினாலும் ஒவ்வொரு கடைசியிலும் வித்தியாசத்தை ஏற்படுத்தும் வகையில் தன் கற்பனையை அமைத்துள்ளார். முதல் காட்சியில் கைலாயத்தில் எழுவகை வண்ணங்களும் குழைத்துத் தூரிகையால் தீட்டியதுபோல் வானம் எங்கும் சில்வென்று இளங்கன்று கற்பகத் தருக்களில் பஞ்சவர்ணக் கிளிகள் படபடவென்று இறக்கைகளை அடித்த வண்ணம் அன்றை பொழுதினை ஆர்வமாய் எதிர்கொண்டன என்று அறிமுகப்படுத்தியுள்ளார் (Avvai Nirmala, 2008).

சூரியன் நண்பகலில் தன் கிரணங்களை உச்சியிலிருந்து நாலாதிசைகளிலும் பாய்ச்சிக் கொண்டிருக்கிறான். இருந்தாலும் சந்தனம், சண்பகம், மகிழம், மரமல்லி, மனோரஞ்சிதம் மருதோன்றி, வெண்நொச்சி எனப் பலவகையான மரம், செடிகள் குளிர்ந்த நிழலையும் மணத்தையும் பரப்பிகொண்டிருக்கின்றன என்று வருணித்துள்ளார் (Avvai Nirmala, 2008).

வேட்டையாடுவோர் இன்மையால் பகுத்து நீண்ட வெண்மையான தந்தங்களோடு களிறுகள் செம்மாந்து திரிந்து கொண்டிருக்கின்றன. அருகே புலிகளும் சிங்கங்களும் தாம் ஈன்ற புனிற்றிளங் குட்டிகளுக்குப் பால் அருந்திக் கொண்டிருக்கின்றன. இது காடா? அல்லது நாடா? என்ற இனம் பிரிக்க முடியாத மயக்கத்தில் விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தன என்று அழகியதோர் இயற்கை வருனணையோடு அமைத்துள்ளதை நம்மால் உணரமுடியும்.

**நாரதர்:** நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் பலர் கிளிபோல் மிழற்றுவதாகக் கருதிக்கொண்டு தமிழ்ச்சொற்களைச் சரிவர உச்சரிக்காமல் ஆங்கிலம் போன்றே பட்டும் படாமல் நுனி நாக்கில் பேசுகிறார்கள். இதில் அதீத ஆங்கிலக் கலப்புவேறு அவர்கள் வேகமாகவும் பேசுவதால் பல

நேரங்களில் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே தெரியவில்லை.

**வள்ளுவர்:** அதைத்தான் நாம் இன்றுமாலையில் பார்த்தோமே.

**வால்மீகி:** இந்நிலைமையைச் சீர்செய்யத் தமிழ்மொழிக் கல்விக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்தால் என்ன?

**நாரதர்:** தமிழ்மொழிக் கல்வி மட்டுமல்ல தமிழ் வழிக்கல்விகே அங்கே கொடி பிடித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் அவை எல்லாம் ஏதோ நாடகம் போன்று அரங்கேறுகிறதே அல்லாமல்

என்னும் பகுதியில் தொகுப்பாளர் நாவில் தமிழ்மொழிபடும் பாட்டை அங்கத் சுவையோடு உணர்த்தித் தமிழ்மொழி வழிக் கல்வியின் தேவையையும் இன்றியமையாமையும் உணர்த்தியுள்ளார். எழுத்தாளரின் நகைச்சுவை உணர்வுக்கு நாடகம் முழுவதிலும் பஞ்சமில்லை அவர் வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் நகைச்சுவையோடு சவுக்கடியும் கொடுக்க தவறியதே இல்லை.

## முடிவுரை

நாடகம் அங்கதச் சுவையோடு சமூகத்தின் எல்லா நிலைகளையும் சுட்டிக்காட்டி நகைபொங்க வைத்துள்ளார். போக்குவரத்து, தொலைக்காட்சி, பூசணி உடைப்பு, முதியோர் இல்லம், வன்கொடுமை, வெடிகுண்டு கலாச்சாரம், மருத்துவம், சுற்றுச்சூழல், பெண்ணியம் என ஆசிரியர் எதையும் விட்டு வைக்கவில்லை. மிகமென்மையாகவும் உள்ளத்தைத் தைக்கும் வகையிலும் படைத்துள்ளார்.

## References


Avvai Nirmala, R., (2008) Sorgathil Nava Bharatham, Novena Offset Printing & Co, Chennai, India.

Karunakaran, G., (2020) Thinai based Antics and Music- Adopting Silapathikaram. International Research Journal of Tamil, 2(2), 31-43. https://doi.org/10.34256/irjt2024

Manikkavasagan, (2015) Silappathikaram Thelivuirai, Uma Pathippakam, Chennai, India.

Rajesh Kanna, C., Sathiyaraj, A., (2022) Theater Structure and Techniques in Sangam Period, International Research Journal of Tamil, 4(1), 149-157. https://doi.org/10.34256/irjt22117

Ramasamy, A., (2002) Sankaradas Swamigal, Sahitya Akademi, Chennai, India.

Suryanarayana Sastri, V.G., (2021) Nadagaviyal, Naam Tamilar Pathippagam, Chennai, India.

Vijayakumar, B., (2022) A Comparative Analysis of Tamil and Assamese Dramatic Tradition, International Research Journal of Tamil, 4(2), 1-8. https://doi.org/10.34256/irjt2221



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License